**16. ஜெல்லி மீன்களால் வலியை உணர முடியுமா?**

மனிதர்களை போன்று வளர்ச்சி பெற்ற உறுப்பு மண்டலங்கள் ஜெல்லி மீன்களில் இல்லாததால் அவற்றால் வலியை உணர இயலாது.

**17. இரவில் ஒளிரும் தன்மைகொண்ட ஜெல்லி மீன்கள் உள்ளனவா?**

சில வகை ஜெல்லி மீன்கள் ஒளிரும் தன்மைகொண்டவை. அவை ஒளிரும் தன்மையை கொன்றுண்ணிகளிடமிருந்து தப்பிப்பதற்கும், உணவை கவர்வதற்கும் பயன்படுத்துகின்றன. ஜெல்லி மீன்களின் ஒளிரும் புரதத்தைப் பற்றிய ஆராய்ச்சி நோபல் பரிசு பெற்றுள்ளது.

**18. ஜெல்லி மீன்கள் எங்ஙனம் இனப்பெருக்கம் செய்கின்றன?**

ஜெல்லி மீன்களில் ஆண், பெண் தனித்தனியானவை. இருப்பினும் இவை இணைந்தோ அல்லது இணையாமலோ இனப்பெருக்கம் செய்ய இயலும்.

**19. ஜெல்லி மீன்கள் மிதவை உயிரிகளா?**

ஜெல்லி மீன்கள் விலங்கு மிதவை உயிரி வகையைச் சார்ந்தவை.

**20. இந்திய கடல் பகுதியில் எத்தனை வகையான ஜெல்லி மீன்கள் காணப்படுகின்றன?**

இந்திய கடல் பகுதியில் 212 வகையான ஹைடிரோசோவன் ஜெல்லி மீன்கள், 37 வகையான சைபோசோவன் ஜெல்லி மீன்கள், 5 வகையான கியூபோசோவன் ஜெல்லி மீன்கள் காணப்படுகின்றன. தமிழக கடற்கரையோரங்களில் 14 வகையான சைபோசோவன் ஜெல்லி மீன்களும், இரு வகையான கியூபோசோவன் ஜெல்லி மீன்களும் காணப்படுகின்றன.

**21. ஜெல்லி மீன்கள் மனிதர்களுக்கு உணவாக பயன்படுகின்றனவா?**

38 வகையான ஜெல்லி மீனினங்கள் மனிதர்களுக்கு உணவாக பயன்படுகின்றன. இந்தியர்கள் ஜெல்லி மீன்களை உண்பதில்லை. சீனர்கள் உலகிலேயே அதிகம் ஜெல்லி மீன்களை உண்கின்றனர். நமது நாட்டிலிருந்து நான்கு வகையான ஜெல்லி மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.


**22. ஜெல்லி மீன்கள் விண்வெளிக்கு பயணித்துள்ளதா?**

1990 களில் அமெரிக்காவின் நாசா அனுப்பிய விண்வெளி ராக்கெட்டுகளில் ஜெல்லி மீன்களை அனுப்பி ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளன. புவி ஈர்ப்பு விசை இல்லாத விண்வெளியில் ஜெல்லி மீன்களில் ஏற்படும் பாதிப்பை அளவிட இச்சோதனை நடத்தப்பட்டது.

எழுதியவர்: முனைவர்.இராஜ் சரவணன், விஞ்ஞானி, கடல் பல்லுயிரி வளப்பிரிவு,
மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், மண்டபம் கேம்ப் -623 520

MBD/JLY/32 CMFRI Pamphlet No.76/2019

# ஜெல்லி மீன்கள் பற்றிய அரிய தகவல்கள்



ICAR

**மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம்**

**மண்டபம் கேம்ப்-623520**

**www.cmfri.org.in**

CMFRI

**1. உலக ஜெல்லி மீன்கள் தினம் என்று கொண்டாடப்படுகிறது?**

நவம்பர் 3

**2. ஜெல்லி மீன்கள் மீன்களா?**

ஜெல்லி மீன்கள் மீன்களன்று. ஏனெனில் அவை முதுகெழும்பற்ற குழியுடலிகள்.

**3. பூமியில் எத்தனை காலமாக ஜெல்லி மீன்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன?**

ஜெல்லி மீன்கள் பூமியில் டைனோசர் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து சுமார் 650 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

**4. ஜெல்லி மீன்கள் எங்கு காணப்படும்?**

ஜெல்லி மீன்கள் நன்னீர் மற்றும் உப்புநீர் ஆகிய இரண்டிலும் காணக்கிடைக்கின்றன. நன்னீர் ஜெல்லி மீன்கள் அளவில் சிறியவையாகவும், மனிதர்களுக்கு பாதிப்பை உண்டாக்காத வகையிலும் உள்ளன.

**5. ஜெல்லி மீன்கள் எதனால் ஆனவை?**

ஜெல்லி மீன்கள் 90 சதவீதம் நீரால் ஆனவை.

**6. ஜெல்லி மீன்களுக்கு மூளை உண்டா?**

ஜெல்லி மீன்களுக்கு மூளை, இரத்தம், எலும்பு, இதயம் ஆகியன கிடையாது. உடலில் காணப்படும் நரம்பு முடிச்சுக்களைக்கொண்டு சுற்றுப்புற மாற்றத்தை உணர்கின்றன.

**7. ஜெல்லி மீன்களுக்கு கண்கள் உண்டா அவை நீருக்கடியில் எங்ஙனம் பார்க்கின்றன?**

சிலவகை ஜெல்லி மீன்கள் அதிலும் குறிப்பாக குத்துச்சொறி, குவலைச்சொறி மீன்களுக்கு 24 கண்கள் உண்டு. மனிதர்களைப் போன்று காண இயலாவிடினும், அவற்றைக்கொண்டு நீந்தும் வழியில் உள்ளவற்றை அவற்றால் அறிய முடியும்.

**8. ஜெல்லி மீன்கள் எவற்றை உண்கின்றன?**

ஜெல்லி மீன்கள் பலவகையான உணவுகளை உண்கின்றன. கடலில் வாழும் ஜெல்லிமீன்கள், விலங்கு மிதவை உயிரிகள், மீன் முட்டைகள், சிறிய மீன்கள் மற்றும் இறால்களை உண்கின்றன. சிலவகை ஜெல்லி மீன்கள் சிறியவகை ஜெல்லி மீன்களை உண்டு வாழ்கின்றன.

**9. ஜெல்லி மீன்கள் ஆயுட்காலம் எவ்வளவு?**

பெரும்பாலான ஜெல்லி மீன்கள் ஓரிரு ஆண்டுகள் உயிர்வாழும் இயல்பை கொண்டவை. ஆனால் 20 வருடங்கள் வரை உயிர் வாழும் வகையும் அவற்றில் உண்டு.

**10. ஜெல்லி மீன்கள் சாகாவரம் பெற்றவையா?**

வகைக்கேற்ப ஜெல்லி மீன்களின் ஆயுட்காலம் மாறுபடும். ஆனால் டுரிடாப்சிஸ் டொர்னி எனும் ஜெல்லி மீன் வயதானதும் மீண்டும் தனது இளமைபருவத்திற்கு வந்துவிடும் திறமைஉள்ளது. உலகில் இந்த திறமைபெற்ற ஒரே உயிரினம் இந்த ஜெல்லி மீன் தான். எனவே இதை சாகாவரம் பெற்ற ஜெல்லி மீன்கள் என்று அழைக்கலாம்.

**11. ஜெல்லி மீன்கள் விஷத்தன்மைஉடையவையா?**

எல்லா வகையான ஜெல்லி மீன்களும் கொட்டும் தன்மையுடையவை. எனினும் 2 சதவீத ஜெல்லி மீன்களே மனிதர்களின் உயிருக்கு ஆபத்தானவை.

**12. ஜெல்லி மீன்களில் மிகவும் கொடியது எது?**

கைரோனாக்ஸ் பிளக்கரி என்றழைக்கப்படும் ஜெல்லி மீன் தான் மிகவும் கொடிய விஷத்தன்மைவாய்ந்த ஜெல்லி மீன். ஒரு மனிதனை மூன்று நிமிடங்களில் கொன்றுவிடும் விஷத்தன்மைகொண்டது. 24 கண்களையும் 10 அடி நீள உணரிழைகளைக்கொண்ட இந்த ஜெல்லி மீன் ஆஸ்திரேலிய கடல் பகுதியில் காணப்படுகிறது. இந்தியக் கடல் பகுதியில் இதுவரை காணப்படவில்லை.

**13. இறந்த ஜெல்லி மீன்களால் கொட்ட முடியுமா?**

ஜெல்லி மீன் இறந்தாலும் அதிலுள்ள கொட்டும் செல்கள் உயிர்ப்புடன் இருந்து கொட்ட இயலும். ஆதலால் கடற்கரையில் ஒதுங்கிய ஜெல்லி மீன்களை வெறுங்கையால் தொடாதீர்.

**14. ஜெல்லி மீன் கொட்டினால் எவ்வாறு முதலுதவி செய்வது?**

பெரும்பாலான ஜெல்லி மீன்கள் உயிருக்கு ஆபத்தில்லாதவை. இருப்பினும் கடலில் காணப்படும் எந்த ஜெல்லி மீன் கொட்டினாலும் எரிச்சலும், வலியும் உண்டாகும். அச்சமயங்களில் கடைகளில் கிடைக்கும் வினிகரை ஜெல்லி மீன் கொட்டிய இடத்தில் அப்படியே ஒரு அரை நிமிடத்திற்கு ஊற்றினால் எரிச்சல், வலி குறையும். அரைமணி நேரத்திற்கும் மேலாக வலி, எரிச்சல், தடிப்பு தொடர்ந்தாலோ, மூச்சு திணறல் ஏற்பட்டாலோ மருத்துவ சிகிச்சையை நாட வேண்டும்.

**15. ஜெல்லி மீன்களால் கடலுக்கு என்ன பயன்?**

பெரும்பாலான ஜெல்லி மீன்கள் கொன்றுண்ணிகளானதால் மற்ற உயிரினங்களின் பெருக்கத்தை ஒரு கட்டுக்குள் வைக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், கரிமசுழற்சியிலும் முக்கியப்பங்கு வகிக்கின்றது. ஜெல்லி மீன்கள் மற்ற கடல்வாழ் மீன் மற்றும் உயிரினங்களுக்கு உணவாக அமைகிறது. கிளாத்தி மீன், கடலாமைமீன்கள் ஜெல்லி மீனை விரும்பி உண்கின்றன.